**03.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

## மெட்ரோ இரயில் நிலையங்களில் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, மெட்ரோ நிலையங்களில் பின்வரும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன

1. மார்ச் 7, 2020 (சனிக்கிழமை) மாலை 5:00 மணி முதல் இரவு 7:00 மணி வரை - வண்ணாரப்பேட்டை மெட்ரோ முதல் விமான நிலையம் மெட்ரோ வரை (வழி ஏ.ஜி.-டி.எம்.எஸ்) மெட்ரோ இரயிலில் “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை”, இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.
2. மார்ச் 7, 2020 (சனிக்கிழமை) மாலை 5:30 மணி முதல் இரவு 7:30 மணி வரை - நங்கநல்லூர்ச் சாலை மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) ‘கமலா இசை பள்ளி’-யின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.
3. மார்ச் 8, 2020 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5:30 மணி முதல் இரவு 7:30 மணி வரை - வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) ‘நிமிர்வு கலையகம்’ பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.